# 2C உருக்காட்டல், கலந்துரையாடல் மற்றும் ஆழமான பகுப்பாய்வு

1. இயல் 2A.6 இல் புலம்பெயர் நாட்டுடன் ஆசிரியர்களுடைய ஒருங்கிணைப்பு குறிப்பிடத்தக்க ஒரு சவாலாக விளக்கப்பட்டுள்ளது (தாய்நாட்டிலிருந்து பிரிந்து வந்தமை, வீடு தேடல், பள்ளி அமைப்பு மற்றும் புலம்பெயர் நாட்டின் சமூகச் சூழலின் அடிப்படையில் ஈடுபடுத்திக் கொள்ளுதல், முதலியன). இது தொடர்பாக இரண்டு அல்லது மூன்று பேர் கொண்ட குழுக்களாக உங்கள் பட்டறிவுகளைப் பரிமாறவும், அதனுடன் புதிய கல்வித் தோழருக்கு ஒருங்கிணைப்புச் செயற்பாட்டுக்கு துணைசெய்யும் வகையில் மதியுரைகளுடைய ஒரு பட்டியல் ஆக்கவும்.

2. பா.மொ.க ஆசிரியராக (உங்கள் பணியின் தொடக்கத்தில் சில ஆண்டுகளின் பின், இன்று) உங்கள் ஒரு நாள் பணியின் பல்வேறு கட்டங்களில் எத்தகையவை இன்றியமையாத சவால்களாக இருந்தன என்பதையும் இவற்றுள் எவை இன்று மிக இன்றியமையாதவையாக இருக்கின்றன என்பதையும் கருத்தில் கொண்டு கலந்துரையாடுக.

3. இயல் 2A.10 வகுப்பறை முகாமைத்துவம், மாணவர் ஈடுபாடு, மாணவர் நடத்தையும் ஒழுங்கும் பற்றி விளங்குகிறது. நீங்கள் இத்தகைய பட்டறிவுகளைப் பெற்றுள்ளீர்களா? உங்கள் பிறப்பு நாட்டு மாணவர்களின் நடத்தைகளிலிருந்து முழுமையாக வேறுபட்ட மாணவர் நடத்தைகளை எவ்வாறு கையாளுகிறீர்கள்?

4. வழமையான வகுப்பறை ஆசிரியர்களுடனான கலந்துரையாடல்கள் மற்றும் இருபக்க வகுப்பு வருகை எவ்வாறு இன்றியமையாதன என்பது இங்கும் பிற இயல்களிலும் திரும்பத் திரும்பக் கூறப்பட்டுள்ளது. உங்கள் பா.மொ.க தோழர்களுடன் அது பற்றிக் கலந்துரையாடுக. நீங்கள் என்ன கற்றீர்கள், நேர்மறை பட்டறிவுகளை நீங்கள் எவ்வாறு உங்கள் நன்மைக்காக எடுத்துக் கொள்வீர்கள், எதிர்மறைகளை உங்களால் தவிர்க்கமுடியுமா?

5. இருவர் அல்லது மூவர் உள்ள குழுக்களாக ஒரு வழமையான வகுப்பறை ஆசிரியரிடம் (அல்லது அரச பள்ளி அமைப்பின் இன்னொரு உறுப்பினரிடமிருந்து) நீங்கள் என்ன கற்றுக்கொள்ள விரும்புகிறீர்கள் அல்லது ஒரு வகுப்பினைப் பார்வையிடும்போது நீங்கள் குறிப்பாக எவற்றைப் பார்வையிட அல்லது கலந்துரையாட விரும்புகிறீர்கள் என்பதைக் கருத்தில் கொள்க. அதற்கான ஓர் உரையாடல் வழிகாட்டி ஒன்றை ஏற்பாடு செய்க மற்றும் ஒரு நேர்காணலுக்கு அல்லது வகுப்பைப் பார்வையிடலுக்கான குறிப்பிட்ட நாளுக்கான ஒரு திட்டத்தினை ஆக்குக.

6. இயல் 2A.5 பா.மொ.க கருத்துப்படிவத்தின் ஆற்றல்களையும் நன்மைகளையும் விவரிக்கின்றது. அவற்றைப் படித்துவிட்டு மேலதிக தகவல்களை இணைக்கவும். நம்பிக்கையில்லாத பெற்றோர்களுக்கும் புலம்பெயர் நாட்டு கல்வித் தோழர்களுக்கும் ஒரு சிறிய அளிக்கையில் பா.மொ.க வின் ஆற்றல்கள் நன்மைகள் பற்றி நீங்கள் எவ்வாறு விவரிப்பீர் மற்றும் விளக்குவீர் என்பதைக் கருத்திற்கொள்க.

7. இயல் 2A.8 வீட்டு ஒப்படைகள் மற்றும் எழுச்சியூட்டும் மற்றும் ஊக்குவிக்கும் ஒப்படைகளின் இன்றியமையாமை ஆகியனவற்றைக் குறிப்பிடுகிறது. வீட்டு ஒப்படைகளை நீங்கள் எவ்வாறு தனியாகக் கையாளுவீர்கள் என்பதை விளக்குக. குறைந்தது இரண்டு உருப்படியான, கவர்ச்சியான, ஆற்றலுடைய ஒப்படைகளைத் திட்டமிட்டு மூன்று கிழமைகளில் அவற்றை நடைமுறைப்படுத்தத் தொடங்கவும்.

8. இயல் 2B யிலுள்ள ஆசிரியர்களின் கூற்றுகளை அல்லது பா.மொ.க மாணவர்களின் மூன்று தன்வரலாறுகளை மீண்டுமொரு முறை படிக்கவும். உங்கள் மனதை எவை தொட்டன அல்லது எவற்றை நீங்கள் கருத்தில் கொண்டீர்கள் மற்றும் ஏன் என சிறு குழுக் கலந்துரையாடலில் கருத்துப் பரிமாறுக.

I